TNTP1C0030202022

Presented on : 26-09-2018
Registered on : 26-09-2018
Decided on : 22-07-2026
Duration : 7 years, 9 months, 26 days

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தொட்டியம்**

**முன்னிலை : திரு. கே.அஜீஸ், B.Com., B.L., (Hons) L.L.M.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**தொட்டியம்.**

**2026ம் ஆண்டு ஜுலை மாதம் 22 ம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 345/2022**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | மாநில அரசு சார்பில்<br>காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,<br>தொட்டியம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 344/2017 |
| அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் | திருமதி.ம.அனுராதா, எம்.எல்., |
| எதிரி | ரமேஷ், (எதிரி)<br>த/பெ.தண்டபாணி,<br>எண். 3/141 திருவேண்டபுரம்,<br>தொட்டியம் வட்டம்,<br>திருச்சி மாவட்டம் |
| எதிரி தரப்பில் வழக்கறிஞர் | திரு.N, சரவணன் பி.ஏ., பி.எல்., |
| சம்பவம் நடந்த நாள் | 10.08.2017 |
| முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நாள் | 11.08.2017 |
| இறுதியறிக்கை தாக்கல் செய்த நாள் | 20.02.2018 |
| குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 02.11.2018 |
| விசாரணை ஆரம்ப நாள் | 26.02.2026 |
| தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்ட நாள் | 14.07.2026 |

| | |
|---|---|
| தீர்ப்பு நாள் | 22.07.2026 |

| எதிரியின் பெயர் | கைது செய்த நாள் | பிணையில் சென்ற நாள் | குற்றம் | முடிவு |
|---|---|---|---|---|
| ரமேஷ் | 13.08.2017 | 13.08.2017 | 279, 304–A | எதிரி மீதான இதச பிரிவுகள் 279 மற்றும் 304 A–ன் கீழான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என முடிவு செய்து, குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கானது கடந்த 26.09.2018 ம் தேதியன்று முசிறி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 74/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் 05.04.2022 ம் தேதிய உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, கடந்த 13.12.2023 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 345/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த திருமதி.ம.அனுராதா, எம். எல்., அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N, சரவணன் பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து

வந்ததுமான இவ்வழக்கில் இன்று 22.07.2026 ஆம் தேதியில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்......

## தீர்ப்புரை

இந்த வழக்கில் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304–A–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்

திருச்சி மாவட்டம், முசிறி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கடந்த 10.08.2017ந் தேதி இரவு 08.35 மணியளவில் ப.சா.1 பிரபாகரன் என்பவரின் ஊரை சேர்ந்த மணிகண்டன் என்பவரின் நண்பர் பாப்பாப்பட்டியை சேர்ந்த செல்வராஜ் மகன் ராஜசேகர் என்பவருடன் செவந்திப்பட்டி – தொட்டியம் ரோடு கொசவம்பட்டி புங்காத்தூவாரி அருகே உள்ள முடக்கில் TN 88 A 7390 ஹீரோ ஸ்பிளண்டர் என்ற வாகனத்தை மணிகண்டன் ஓட்ட பின்னால் ராஜசேகர் உட்கார்ந்து கொண்டும் மேற்கு நோக்கி அதிவேகமாவும், அஜாக்கிரதையாவும், கவனக்குறைாகவும், TN 63 Q 3276 என்ற டிராக்டரை இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவும், அஜராக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி மணிகண்டன் என்பவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி ராஜசேகருக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ள குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304 A–ன் கீழ் தொட்டியம் காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி மீது முகாந்திர வழக்கு இருந்ததால், இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இதச பிரிவுகள் 279, 304A–ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கின் எதிரி ஆஜரானதும், அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் இலவசமாக எதிரிக்கு வழங்கப்பட்டது.

3. எதிரி மீண்டும் முன்னிலையானதும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி மீது குற்றம் செய்ததற்கான முகாந்தரம் தென்பட்ட காரணத்தினால் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304 A–ன் கீழ் குற்றத்தின் சாராம்சம் விளக்கி வினவப்பட்டது. எதிரி குற்றத்தை மறுத்துள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>5. அரசுத் தரப்பு சாட்சிகளில் இருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்–</u>**

i) **<u>அ.சா.1.சுப்பரமணி தனது சாட்சியத்தில்</u>** கடந்த 10.08.2017ம் தேதியன்று சேர்வைக்காரன்பட்டி – தொட்டியம் 4B பேருந்தில் (TN 45 N 2311) ஓட்டுநராக பணியிலிருந்து பேருந்தின் நடத்துநராக சாட்சி பழனிவேல் என்பவர் இருந்தபோது அன்று இரவு 8.35 மணிக்கு காமலாபுரம் புங்காத்துவாரி அருகே வந்துகொண்டிருந்தபோது கிழக்கிலிருந்து மேற்கே வந்த TN 63 Q 3276)டிராக்டருக்கு வழிவிட்டு, ஓரமாக பேருந்தினை நிறுத்தியதாகவும், டிராக்டரை தங்களது பேருந்துக்கு பின்னால் அதன் ஓட்டுநர் நிறுத்தியதாகவும், அருகில் இரண்டு நபர்கள் விபத்துக்குள்ளாகி கீழே கிடந்ததாகவும் எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றும், டிராக்டிரை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரிதான் என்றும், பின்னர் காயம்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) **<u>அ.சா.2 பழனிவேல் தனது சாட்சியத்தில்</u>** கடந்த 10.08.2017ம் தேதியன்று சேர்வைக்காரன்பட்டி– தொட்டியம் 4B பேருந்தில் TN.45 N 2311 ஓட்டுநராக பணியிலிருந்ததாகவும், பேருந்தின் நடத்துநராக சாட்சி பழனிவேல் என்பவர் இருந்தததாகவும், அன்று இரவு 8.35 மணிக்கு காமலாபுரம் புங்காத்துவாரி அருகே வந்துகொண்டிருந்தபோது கிழக்கிலிருந்து மேற்கே வந்த TN 63 Q 3276 டிராக்டருக்கு

வழிவிட்டு, ஓரமாக பேருந்தினை நிறுத்தியதாகவும், டிராக்டரை தங்களது பேருந்துக்கு பின்னால் அதன் ஓட்டுநர் நிறுத்தியதாகவும், அருகில் இரண்டு நபர்கள் விபத்துக்குள்ளாகி கீழே கிடந்ததாகவும், எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும், டிராக்டிரை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரிதான் என்றும், பின்னர் காயம்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii) **அ.சா.3 பிரபாகரன் தனது சாட்சியத்தில்,** கடந்த 10.08.2017 தேதியன்று இரவு 8.30 மணிக்கு தான் தொட்டியம் சென்று கொண்டிருந்தபோது, தனக்கு முன்னால் TN 88 A 7290 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் மணிகண்டன் வண்டியை ஓட்டி ராஜசேகர் பின்னால் அமர்ந்து சென்றதாகவும், சாட்சி தற்போது வண்டியின் பதிவெண் 7390 என்றும், அவர்கள் புங்காத்துவாரி முடக்கில் சென்றபோது, தொட்டியத்திலிருந்து வந்த டிராக்டர் TN 63 Q 3276 இருசக்கர வாகனத்தின் மீது மோதியது என்றும், அதனால் வண்டியில் வந்த இருவரும் கீழே விழுந்துவிட்டதாகவும் தான் சென்று பார்த்தபோது, மணிகண்டன் தலையில் அடிப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும், ராஜசேகர் என்பவருக்கு லேசான காயம் ஏற்பட்டிருந்ததாகவும், பிறகு 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி, காயம்பட்டவர்களை தொட்டியம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும், விபத்தை ஏற்படுத்திய டிராக்டரை ஓட்டியவர் ஆஜர் எதிரிதான் என்றும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மணிகண்டன், ராஜசேகர் ஆகியோர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதை நான் தான் எழுதியதாகவும், அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

iv) **அ.சா.4 பெரியசாமி தனது சாட்சியத்தில்,** கடந்த 10.08.2017 தேதியன்று காலை 9.30 மணியளவில் தான் புங்காத்துவாரிக்கு தெற்கில் போலீசார் விபத்து வழக்கு சம்மந்தமாக விசாரித்து வரைபடம் வரைந்து எழுதிக் கொண்டதாகவும், அந்த பார்வை

மகசரில் தான் கையொப்பம் செய்தபிறகு பொன்னுசாமி என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தாகவும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும்சாட்சியம் அளித்துள்ளார்.

v) **அ.சா.5 திநேஷ் தனது சாட்சியத்தில்** கடந்த 10.08.2017 தேதியன்று இரவு 8.30 மணியளவில் தனது தம்பி ராஜசேகர் மணிகண்டன் என்பவரின் இருசக்கர வாகனத்தில் கொசவம்பட்டி அருகில் உள்ள வளைவில் டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், தகவல் கிடைத்ததாகவும், தான் இறந்துபோன தன் தம்பியை முசிறி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தாகவும், இதுசம்மந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

vi) **அ.சா.6 மலையாளன் தனது சாட்சியத்தில்** கடந்த 10.08.2017 தேதியன்று இரவு 8.00 மணியளவில் தனது அண்ணன் மகன் ரமேஷ் என்பவர் தன் மகன் மணிகண்டன் அவரது நண்பர் ராஜசேகர் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, கொசவம்பட்டி புங்காத்து வாரி அருகே டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். மேலும் விபத்தை ஏற்படுத்தியவர் பெயர் ரமேஷ் என்று கேள்விப்பட்டதாகவும், தான் இறந்துபோன தனது மகனை நாமக்கல் தனியார் மருத்துவமனையில் சென்று பார்த்ததாகவும் போலீசார் தன்னை விசாரணை செயத்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

vii) **அ.சா.7 பாலசுப்பரமணியன் தனது சாட்சியத்தில்** கடந்த 10.08.2017 தேதியன்று இரவு 8.45 மணியளவில் தனது தம்பி மணிகண்டன் அவரது நண்பர் ராஜசேகர் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, கொசவம்பட்டி புங்காத்து வாரி அருகே டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னதாகவும், மேலும் விபத்தை ஏற்படுத்தியவர் பெயர் ரமேஷ் என்று கேள்விப்பட்டதாகவும், தான் இறந்துபோன தனது தம்பியை முசிறி அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தாகவும்,

இதுசம்மந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

viii) **<u>அ.சா.8 செந்தில்குமார் தனது சாட்சியத்தில்</u>** கடந்த 10.08.2017 தேதியன்று 20.30 மணியளவில் தொட்டியம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக முத்தையன் என்பவர் பணியில் இருந்தபோது, செவந்திப்பட்டியை சேர்ந்த தங்கவேல் மகன் பிரபாகரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில், தொட்டியம் காவல் நிலைய குற்ற எண். 344/2017 ல் சட்டப்பிரிவுகள் 279, 304(அ) இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து வழக்கினை மேல்விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்தாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்பு மறுநாள் 11.08.2017 தேதியன்று வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பெரியசாமி, பொன்னுசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்பு வழக்கின் சம்பவத்தில் இறந்துபோன மணிகண்டன், ராஜசேகர் ஆகியோர்களது பிரேதத்தின் மீது முசிறி அரசு மருத்துவமனையில் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததாகவும், மணிகண்டன் என்பவரது பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், ராஜசேகர் என்பவரது பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்பு இறந்து போன மணிகண்டன், ராஜசேகர் ஆகியோர்களது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக காவலர்கள் ரமேஷ், பிரியா ஆகியோர்களிடம் வேண்டுகோள் கடிதத்துடன் ஒப்படைத்தேன். பின்பு சாட்சிகள் பிரபாகரன், செல்வராஜ், தினேஷ், தங்கதுரை, ராமமூர்த்தி, தங்கராஜ், மலையாளன், பாலசுப்பிரமணியன், பொன்னுசாமி, செல்வராஜ், நடேசன், பெரியசாமி, பொன்னுசாமி, சுப்பிரமணியன்,

பழனிவேல் ஆகியோர்களைத் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்யததாகவும், பின்பு வழக்கில் தொடர்புடைய எதிரியை தேடிவந்த நிலையில், எதிரி ரமேஷ் என்பவரை அவரது வீட்டின் முன்பு கடந்த 13.08.2017 ம் தேதியன்று 15.00 மணிக்கு காரணம்கூறி கைதுசெய்து உரிய நடைமுறைக்குப்பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனமான TN 63 Q 3276 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் வாகனத்தையும், விபத்திற்குள்ளான வாகனமான TN 88 A 7390 என்ற பதிவெண் கொண்ட HERO SPLENDER PRO என்ற இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். பின்பு முசிறி அரசு மருத்துவமனை சென்று இறந்துபோன மணிகண்டன், ராஜசேகர் ஆகியோர்களது பிரேதத்தை கூராய்வு செய்த மருத்துவர் ரமேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வந்ததாகவும், மணிகண்டன் என்பவரது பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 7 ஆகவும், ராஜசேகர் என்பவரது பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்பு முசிறி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சென்று விபத்தை ஏற்படுத்திய மற்றும் விபத்திற்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் முரளி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று வந்ததாகவும், TN 63 Q 3276 என்ற டிராக்டர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 9 ஆகவும், TN 88 A 7390 என்ற HERO SPLENDER PRO என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்பு முதல் நிலை காவலல் ரமேஷ், பெண் காவலர் பிரியா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் வாங்கியதாகவும், பின்பு நிலையம் ஆஜராகி வழக்கின் விசாரணை முடித்து, வழக்கின் கோப்பினை பார்வையிட்டு ஆஜர் எதிரிக்கு எதிராக 20.02.2018 தேதியன்று சட்டப்பிரிவுகள் 279, 304அ 2 எண்ணிக்கைகள் ஆகவும், இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செயத்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சிகளுடன் விசாரணை முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான சாட்சியங்கள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது, எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சிகள் என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. இவ்வழக்கில் இனி காணவேண்டிய தீர்வு யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.**

8. அரசு தரப்பு வழக்கானது, திருச்சி மாவட்டம், முசிறி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கடந்த 10.08.2017ந் தேதி இரவு 08.35 மணியளவில் ப.சா.1 பிரபாகரன் என்பவரின் ஊரை சேர்ந்த மணிகண்டன் என்பவரின் நண்பர் பாப்பாப்பட்டியை சேர்ந்த செல்வராஜ் மகன் ராஜசேகர் என்பவருடன் செவந்திப்பட்டி – தொட்டியம் ரோடு கொசவம்பட்டி புங்காத்தூவாரி அருகே உள்ள முடக்கில் TN 88 A 7390 ஹீரோ ஸ்பிளண்டர் என்ற வாகனத்தை மணிகண்டன் ஓட்ட பின்னால் ராஜசேகர் உட்கார்ந்து கொண்டும் மேற்கு நோக்கி அதிவேகமாவும், அஜாக்கிரதையாவும், கவனக்குறைாகவும், TN 63 Q 3276 என்ற டிராக்டரை இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவும், அஜராக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி மணிகண்டன் என்பவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி ராஜசேகருக்கு இறப்பை ஏற்படுத்தியது குற்றமாகும்.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

10. அரசு தரப்பு கற்றறிந்த உதவி வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.8 மற்றும் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையான சாண்றாவனங்களின் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

11. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் தன்னுடைய வாதத்தில், அரசு தரப்பு சாட்சிகள் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், எதிரி அதிவேமாகவோ அல்லது கவனக்குறைவாக வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றும், எனவே சந்கேத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

12. எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304 A – ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

13. எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 304 A ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து காண்பதற்கு, எதிரி மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமாக பொது பாதையில் கவனக்குறைவாகவோ அல்லது அதிவேகமாகவோ வாகனத்தை இயக்கியிருக்க வேண்டும், அதனால் பாதிக்கப்பட்டவர்க்கு மரணத்தை விளைவித்திருக்க வேண்டும்.

14. அரசு தரப்பில் இவ்வழக்கில் இறப்புற்ற மணிகண்டன் மற்றும் ராஜசேகர் பிரேத பரிசோதனை சான்று அ.த.சா.ஆ.7 மற்றும் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவ்வழக்கில் இறப்புற்ற நபர்களான மணிகண்டன் மற்றும் ராஜசேகர் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அ.த.சா.ஆ.7 மற்றும் அ.த.சா.ஆ.8 பரிசீலனை செய்கையில், விபத்தில் தலையில் ஏற்பட்ட காயத்தினால் மேற்படி மணிகண்டன் மற்றும் ராஜசேகர் இறந்துள்ளது நிரூபணமாகிறது.

15. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.9 மற்றும் அ.த.சா.ஆ.10 வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அ.த.சா.ஆ.9 மற்றும் அ.த.சா.ஆ.10 பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் இறப்புற்ற நபர்கள் மற்றும் எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் இயந்திர கோளாறினால் விபத்து ஏற்படவில்லை என்பதும் புலனாகிறது. மேற்படி சாட்சிய, சான்றாவணங்களை ஆய்வு செய்கையில், மணிகண்டன் மற்றும் ராஜசேகர் விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தான் இறந்துள்ளார் என்பதும் விபத்து வாகனத்தின் இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்பதும் நிரூபணமாகிறது.

16. மேலும், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை எதிரி தான் ஓட்டி வந்தாரா என்பது குறித்தும் அவரின் அஜாக்கிரதையால் தான் விபத்து நடைபெற்றதா என்பதை ஆராயவேண்டியது அவசியமாகிறது.

17. அ.சா.ஆ.1 புகாரில் கடந்த 10.08.2017ந் தேதி இரவு 08.35 மணியளவில் செவந்திப்பட்டி – தொட்டியம் ரோடு கொசவம்பட்டி புங்காத்தூவாரி அருகே உள்ள முடக்கில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது எதிரே அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், வந்த டிராக்டர் மோதி ராஜசேகர் என்பவரின் உடம்பின் வலது புறம் காயம் ஏற்பட்டும், மணிகண்டனுக்கு தலையில் மற்றும் உடம்பில் ரத்தகாயம் எற்பட்டும், தொட்டியம் அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தாகவும், மணிகண்டனும் ராஜசேகரம் போகும் வழியில் இறந்துவிட்டதாகவும், இருவரின் இறப்பிற்கு காரணமான வாகனத்தின் ஓட்டுநர் ரமேஷ் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தொட்டியம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

18. கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் இரவு 08.30 மணிக்கு தொட்டியம் சென்று கொண்டிருந்தபோது தனக்கு முன்னால் இறந்துபோன மணிகண்டன் வண்டி ஓட்ட ராஜசேகர் பின்னால் அமர்ந்து சென்றதாகவும் புங்காத்துவாரி முடக்கில் சென்றபோது தொட்டியத்தில் இருந்து வந்த டிராக்டர் TN 63 Q 3276 என்ற இருசக்கர வாகனம் மோதியதில் வண்டியில் வந்த இருவரும் கீழே விழுந்துகிடந்தார்கள் என்று கூறியுள்ளார். ஆனால் அவர் தனது குறுக்கு விசாரணையில்

" விபத்து நடைபெற்ற பின்புதான் தான் சம்பவம் இடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான் என்றும், சம்பவம் நடந்த நேரத்தில் நான் பார்க்கவில்லை என்றும், ஆனால் சம்பவம் நடந்த பின்னால் நான் வந்து கொண்டிருந்ததேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

19. மேலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரும் தங்களது சாட்சியத்தில் 10.08.2017ந் தேதியன்று இரவு 08.30 மணிக்கு புங்காத்தூவாரி அருகே வந்து கொண்டிருந்தபோது கிழக்கில் இருந்து மேற்கே வந்த TN 63Q 3276 என்ற

டிராக்டருக்கு வழிவிட்டு பேருந்தை நிறுத்தியாகவும், டிராக்டர்கள் தங்களது பேருந்துக்கு பின்னால் நிறுத்தியதாகவும் அருகில் இரண்டு நபர்கள் விபத்துக்குள்ளாகிய கீழே கிடத்தார்கள் என்றும், எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று தெரியாது என்று கூறியுள்ளார்கள். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையின் போது

" நான் இயக்கிய பேருந்திற்கு எதிரே முன்னதாக விபத்துக்குள்ளானவர்கள் கீழே கிடந்ததால் நான் வண்டியை நிறுத்திவிட்டேன். டிராக்டர் வண்டியை தாண்டி பின்னால் சென்று நின்றது என்றால் சரிதான். விபத்துக்குள்ளானவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் டிராக்டர் ஓட்டுநர் அனுப்பி வைத்தார்".

20. மேற்கண்ட 1 முதல் 3 வரையான சாட்சிகளின் சாட்சியங்களை ஒருசேர பார்க்கும்போது அ.சா.3 விபத்தை நேரில் பார்க்கவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், அ.சா.1 குறுக்கு விசாரணையில் தனக்கு முன்னதாக விபத்துக்குள்ளனவர்கள் கிடந்ததால் தனது பேருந்தை ஓரமாக நிறுத்தியதாக குறுக்கு விசாரணையில் தெரிவித்துள்ளார். அது அவரின் முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு முற்றிலும் முரண்பட்டு காணப்பட்டுள்ளது. மேலும், அ.சா.3 தனது நீதிமன்ற விசாரணையில் அவர்தான் காயம்பட்ட நபரை 108 ஆம்புலனஸ் மூலம் அனுப்பி வைத்தாக தெரிவித்துள்ளார். ஆனால் அ.சா.1, எதிரிதான் 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தாக தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி நபர்களின் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரண்பட்டு காணப்படுகிறது. அ.த.சா.ஆ.9 ஐ பரிசீலனை செய்த வகையில் எதிரியால் ஓட்டி வரப்பட்டதாக சொல்லும் வாகனத்தில் எந்தவித சேதமும் காணப்படவில்லை என்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய சான்றில் கண்டுள்ளது. எனவே, மேற்கூறிய காரணங்களுக்காக எதிரி ஓட்டி வந்த வாகனத்தால்தான் விபத்து ஏற்பட்டது என்பது குறித்து அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. மேலும், அ.சா.4-ன் சாட்சியத்தை பார்க்கும் போது புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டுள்ளார் என்பதும் தெரியவருகிறது. மேலும், அ.சா.5 முதல் அ.சா.7 வரையான சாட்சிகள் சம்பவத்தை குறித்து கேள்விநிலை சாட்சிகளை தவிர கண்ணுற்ற சாட்சிகள் இல்லை. எனவே, அவர்களின் சாட்சியத்தை கருத்தில்

எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அ.த.சா.ஆ1ஐ பார்க்கும்போது டிராக்டர் TN 63 Q 3276 என்ற வாகனத்தில் சந்தேகம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், யாருடைய அஜாக்கிரதையால் விபத்து நேர்ந்தது குறித்து அரசு தரப்பில் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.த.சா.ஆ7 ஐ பரிசீலனை செய்தபோது இருசக்கர வாகனத்தை ஒட்டிய நபரான மணிகண்டன் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் மதுவின் வாசனை தென்பட்டதாக மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் அ.த.சா.ஆ.8 ஐ பரிசீலனை செய்கையில் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த ராஜசேகரன் என்பவருக்கு மது வாசனை தென்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

21. அ.சா.1-ன் குறுக்கு விசாரணையின் போது தனக்கு முன்னதாக விபத்துக்குள்ளானவர்கள் கீழே கிடந்ததால் பேருந்தை ஓரமாக நிறுத்தியதாக கூறியுள்ளார். மேலும், முதல் விசாரணையில் டிராக்டர் வருவதை பார்த்து வாகனத்தை ஓரமாக நிறுத்தியதாக கூறியுள்ளார். எனவே, மேற்படி விபத்தானது எதிரி ஓட்டி வந்த வாகனத்தால்தான் ஏற்பட்டதா அல்லது வேறு வாகனத்தாலும் ஏற்பட்டதா அல்லது பேருந்தால் தான் ஏற்பட்டதா என்பது குறித்து அரசு தரப்பில் சாட்சிகள் மூலம் தெளிவுப்படுத்தவில்லை. மேலும், பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்துபோன நபர்களின் உடம்பில் மது வாசனை இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாக போலிசார் விசாரணை செய்து அதில் எவ்வளவு சதவீதம் மது இருந்ததது குறித்து விளக்கப்படவில்லை. எனவே, பிரிவு 185 மோட்டார் வாகன சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவை காட்டிலும் அதிகமாக மது அருந்தி அதனால் விபத்து ஏதேனும் நேர்ந்ததா என்பது குறித்து அரசு தரப்பில் தெளிவுப்படுத்தவில்லை. எனவே, அரசு தரப்பில் போதிய சாட்சி மற்றும் சாண்றாவணங்கள் மூலமாக எதிரி ஓட்டி வந்த வாகனத்தால் தான் விபத்து நேர்ந்தது என்றும், அவருடைய அஜாக்கிரதை மற்றும் அதிவேகம் தான் விபத்து ஏற்பட காரணம் என்று அரசு தரப்பு நிரூபணம் செய்யவில்லை.

22. இவ்வழக்கில் எதிரி குற்றவாளியா, இல்லையா என்பதை தீர்மானிப்பது

***Section 279 Rash driving or riding on a public way.–***

***Whoever drives any vehicle or rides, on any public way in a manner so rash or negligent as to endanger human life, or to be likely to cause hurt or injury to any other person, shall be punished with imprisonment of either description for a term which may extend to six months or with fine which may extend to one thousand rupess, or with both.***

***Section 304–A causing death by negligence, –***

***Whoever causes the death of any person by doing any rash or negligent act not amounting to culpable homicide, shall be punished with imprisonment of either description for a term which may extend to two years or with fine or withboth.***

23. மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி தண்டிக்கப்படவேண்டுமானால், எதிரி அதிவேகமாகவோ அல்லது கவனக்குறைவாகவோ மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமாக பொது பாதையில் வாகனத்தை இயக்கி அதன் மூலம் இவ்வழக்கில் இறப்புற்ற மணிகண்டன் மற்றும் ராஜசேகர் என்பவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

24. அரசு தரப்பில் விபத்தை நேரில் பார்த்தாக யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. கண்ணுற்ற சாட்சிகள் எதிரியின் அஜாக்கிரதையால் தான் விபத்து நடைபெற்றது என்பது குறித்து தெளிவுப்படுத்தவில்லை. ஆகவே, எதிரி அதிவேகமாகவோ அல்லது கவனகுறைவாகவோ வாகனத்தை இயக்கினாரா என்பது சந்தேகத்தை எழுப்புகிறது. மேலும், எதிரி ஓட்டி வந்த வாகனத்தினால்தான் விபத்து ஏற்பட்டது என்பது குறித்தும், அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சான்றவாணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

25. மேற்கண்ட பரிசீலனைகளின் படி எதிரி வாகனத்தை அதிவேகமாகவோ அல்லது முழு கவனக்குறைவாக ஓட்டிவந்து, விபத்தை ஏற்படுத்தினார் என்பதை சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**26. முடிவாக,**

எதிரி மீதான இதச பிரிவுகள் 279 மற்றும் 304 A–ன் கீழான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என முடிவு செய்து, குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இல்லை. எனவே அது குறித்த உத்தரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு 2026 ஆண்டு ஜீலை மாதம் 22ம் தேதி அன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AJEESH KURUSUMUTHU

Digitally signed by AJEESH KURUSUMUTHU
Date: 2026.07.22 18:40:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தொட்டியம்

**அரசு தரப்பு சாட்சிகள்**

| அ.சா | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர்கள் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரங்கள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|---|---|
| அ.சா.1 | சுப்பிரமணியன் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி | 26.02.2026 | 26.02.2026 |
| அ.சா.2 | பழனிவேல் | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி | 26.02.2026 | 26.02.2026 |
| அ.சா.3 | பிரபாகரன் | சம்பவத்தை பற்றியும் புகார் அளித்த சாட்சி | 09.04.2026 | 09.04.2026 |
| அ.சா.4 | பெரியசாமி | பார்வை மகஜர் சாட்சி | 09.04.2026 | 09.04.2026 |
| அ.சா.5 | தினேஷ் | சம்பவம் பற்றி கேள்விப்பட்ட சாட்சி | 09.04.2026 | 09.04.2026 |
| அ.சா.6 | மலையாளன் | சம்பவம் பற்றி கேள்விப்பட்ட சாட்சி | 09.04.2026 | 09.04.2026 |
| அ.சா.7 | பாலசுப்பரமணியன் | சம்பவம் பற்றி | 09.04.2026 | 09.04.2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கேள்விப்பட்ட சாட்சி | | |
| அ.சா.8 | திரு.செந்தில்குமார் ( காவல் ஆய்வாளர்) | இறுதி அறிக்கை தயார் செய்தது பற்றி | 02.07.2026 | 02.07.2026 |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| அ.சா.ஆ | சான்றுகளின் விவரம் | தேதி |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு | 09.04.2026 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் | 09.04.2026 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | 02.07.2026 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | 02.07.2026 |
| அ.சா.ஆ.5 | மணிகண்டன் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை | 02.07.2026 |
| அ.சா.ஆ.6 | ராஜசேகர் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை | 02.07.2026 |
| அ.சா.ஆ.7 | மணிகண்டன் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை | 02.07.2026 |
| அ.சா.ஆ.8 | ராஜசேகர் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை | 02.07.2026 |
| அ.சா.ஆ.9 | TN 63 Q 3276 என்ற டிராக்டர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை | 02.07.2026 |
| அ.சா.ஆ.10 | TN 88 A 7390 HERO SPLENDER PRO என்ற மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை | 02.07.2026 |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்** – இல்லை
**எதிரி தரப்பு சாட்சிகள்** – இல்லை
**எதிரி தரப்பு சான்றாவணம்** – இல்லை
**நீதிமன்ற சாட்சிகள், சான்றாவணங்கள்** – இல்லை

AJEESH KURUSUMUTHU
Digitally signed by AJEESH KURUSUMUTHU
Date: 2026.07.22 18:40:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தொட்டியம்

**குறிப்பு:**

1. இவ்வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
3. முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.